காஞ்சி!

நிறுவனர்: அறிஞர் அண்ணா.

4 - 11 - 1973

மலர் : 10 ★ இதழ் : 17

★

உள்ளே......

படமாம் படம்!
(தம்பிக்கு அண்ணாவின் மடல்)

★

முற்போக்கு நடவடிக்கை
(தலையங்கம்)

★

குறளமுதம் - 4
(கட்டுரை)

★

வெள்ளையுள்ளம்
(சிறுகதை)

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)

★

"சீரழியும் சிங்களமே!"

பெத்தானூர் கவிஞர் மலர்வண்ணன்

அரசாளும் எண்ணத்தில் ஆசை வைத்து
அரியபலக் கொடுமைகளை அன்றும் இன்றும்
சிரமேற்றுக் காக்கின்றச் சிங்களப் பேயே
சிறிதளவும் அறியாமலிச் செயலைச் செய்தாய்!
தரங்கெட்ட வஞ்சத்தால் தூண்டப் பெற்று
தகப்பனையும் கொன்றுமுடி யரசு ஏற்ற
வரலாற்றைப் படைக்கின்ற உன்னிடத்தில்
வாஞ்சையினைக் காண்பதுவும் புதுமைத் தானே!

கண்மூடிச் செயலாலுன் கருத்திழந்து
கனித்தமிழன் உரிமைதனைக் கவர்ந்து விட்டாய்!
மண்ணிடையே ஒற்றுமைக்கு வழியைத் தேடும்
மத்தியிலே பிரிவினையைப் புகுத்தி விட்டாய்!
வண்டமிழர் வாழ்வுதனை அழித்து விட்டு
வஞ்சத்தின் புத்தரசை அமைத்து விட்டாய்!
பண்பில்லா சிங்களமே பதைக்க வேண்டாம்
பழங்கதையை மீண்டுமிங்கே புகுத்த
[வேண்டாம்!

அந்நாளில் அடிமைதனை அமைத்து விட்ட
அரசுபட்ட பாட்டினைநீ அறிய வேண்டும்!
இந்நாளில் நீயமைத்த அடிமைச் சட்டம்
இழிவுடைத்து என்பதைநீ உணர வேண்டும்!
எந்தமிழர் எந்நாளும் பகைக்கு முன்னே
இழிவடையா மாத்தமிழர்! எதிர்க்க வேண்டாம்!
செந்தமிழன் உரிமைக்குத் தடையே என்றால்
சீரழியும் சிங்களமே சிதைந்து போவாய்!

விலை : 0-25 காசு

குறளமுதம் - 4

(19-4-73 காலை 6-04)

மு. பி. பாலசுப்பிரமணியன், எம் ஏ,

போட்டி உணர்ச்சியினால் சிலநேரங்களில் நன்மையும் விளைவதுண்டு. படிப்பில் போட்டி உணர்ச்சியிருந்தால் பலன் கிட்டும்வழி உண்டு. விளையாட்டுப்போட்டியில் போட்டியுணர்ச்சியிருந்தால் பரிசு வாங்க வாய்ப்பு உண்டு. திறமையை வெளிப்படுத்துவதில் போட்டி உணர்வுகொள்வதால், தீங்கு அவ்வளவாக இல்லை! தீய எண்ணத்தை வெளிப்படுத்துவதில் பொறாமை கொள்ளும் போதுதான், தீமைகளே உருக்கொண்டு திரியமுனைகின்றன; திருத்தாண்டவம் புரியத்தொடங்குகின்றன.

ஒன்றுக்கோ நூறினைக்கண்டு பொறாமை; நூறுக்கோ ஆயிரத்தை, இலட்சத்தைக் கண்டு பொறாமை; இலட்சத்திற்கோ, கோடியைக் கண்டு பொறாமை, இங்ஙனம் கோடி, கோடிப் பொறாமைகளின் கூடாரமாக விளங்கும் கோணல் சமுதாயத்தைத் திருத்தும் அற்புதச் சக்திபடைத்த அமுதக் குளிகைதான், திருக்குறள் பெட்டகமாகும்.

தூய சிந்தையைச் சிதைத்து, தீய எண்ணத்தைப் புகுத்தித் திண்டாடவைக்கும் பொறாமைக் குணத்தால் அழிந்து போனவர்கள்—அல்லற்பட்டவர்கள் அநேகம் பேர். அவ்வளவு ஏன்? தெய்வாம்சம் பொருந்தியதாகக் கருதப்படும் புராணங்களில் கூட, பொறாமைக்குணம் உடையவர்களையும் சந்திக்கத்தானே வேண்டியிருக்கிறது? அவர்கள் நம்மைச் சிந்திக்கத்தானே வைக்கிறார்கள்?

தர்மன் செய்த வேள்வியின்போது, "கண்ணனுக்கு, முதல் மரியாதையா?" என அழுக்காறு கொண்டு, சிசுபாலன் அழிந்தகதை—புராணப் புனைந்துரையாயினும்-பொறாமையின் முடிவு அழிவு என்பதைத்தானே இப்புவனத்திற்கு உணர்த்துகிறது!

குந்திதேவி மகப்பேறு பெற்றதும், அழுக்காறு கொண்ட காந்தாரியின் கருசிதைந்தது; பொறாமைக் காரியான அவளுக்குப் பிறந்த புதல்வர்களும் புத்திகெட்டுப் போயினர். பொறாமையால் விளைந்த கேட்டினைத்தானே, இப்புனைந்துரையும் பூதலத்திற்கு எடுத்து விளக்குகின்றது!

பொறாமைப்பட்டு, அதன்மூலம் பெருமையடைந்தவர் யாருமே இல்லை என்பது வள்ளுவரின் அசைக்கமுடியாத நம்பிக்கை.

"அழுக்கற்று அகன்றாரும் இல்லை" என்று வலியுறுத்திக் கூறப்படுவதிலிருந்து பொறாமையின் இழிதகமை புலப்படுகிறதன்றோ? பொறாமையால் பெருமையில்லை, சிறுமையுண்டு; உயர்வில்லை, தாழ்வுண்டு. இதைத்தான் வள்ளுவரும் உரைக்கின்றார்.

சிறுமையையும் தாழ்வையும் தரும் பொறாமைக் குணமோ, நடைமுறை வாழ்வில் புகுந்துகொண்டு புரியும் இழி செயல்கள் கொஞ்சமல்ல! எத்தனை பெரிய மனிதரையும் அது ஆட்டிப்படைக்கத்தானே செய்கின்றது. அலுவலகங்களில் வீண்பெருமைக்காகப் பொறாமைப்பட்டுச் சிறுமைப்படுவோர் பலர் உண்டு. புதுமுகங்களின் முன்னேற்றம் கண்டு பொறுக்காமல் மனம் புழுங்கும் பழைய முகங்களின் திரைமறைவுச் சதிவேலைகள், திரைப்படத்துறையின் பொறாமைச் சாசனங்கள்! அப்பொறாமைச் செயல்களுக்குக் கிடைக்கும் பரிசுகளோ, அவமான முத்திரைகள்!

பிறர் செல்வாக்கு, புகழ் கண்டு பொறாமை கொள்வதோ அறவே கூடாது. இது வள்ளுவர் வகுத்த அறம். அரசியல் உலகிலோ முன்னணியில் இருப்பவரைப் பார்த்து, பின்னணியில் இருப்பவரால் சகித்துக்கொள்ள முடிவதில்லை. தன்னால் முன்னணிக்கு வந்த இவனுக்கு இவ்வளவு செல்வாக்கா? என அழுக்காறு கொண்டு அடாத செயல்கள் செய்து, படாதபாடு படுகிறவர்களும் உண்டன்றோ?

மக்களாட்சித் தத்துவத்திற்கு மறுவடிவம் கொடுப்பதில் மாபெரும் வெற்றி ஈட்டி வரும் இந்தியத்திற்கு ஆசிய அரங்கில் இவ்வளவு மதிப்பா, எனப் பொறாமை கொண்டு போர்தொடுத்து, தோல்வியை அணைத்த பாகிஸ்தான் அடைந்த சிறுமையினை உலகம் மறந்தா போகும்? ஆங்கிலத்தோடு தகுதி பெற்றோர்க்கு இணையாக, தமிழ் மட்டும் கற்றோர்க்குத் தனிமதிப்பா? என்று பொறாமை எண்ணத்தோடு வினாக்கணை தொடுத்து, பெருமையடையாமல், போனவர்களும் வள்ளுவர் வாக்கிற்கு வலியூட்டப் பிறந்தவர்கள் அன்றோ?

ஆம்! பொறாமையின் அடிப்படையில் போடப்படும் எந்தத்திட்டங்களுக்கும், செய்யப்படும் எந்தச் செயல்களுக்கும் என்றும் வெற்றி இல்லை; அதுபோல், பொறாமை இல்லாத தூய மனங்களின் முயற்சிக்கு என்றும் தோல்வி இல்லை.

பொறாமை இருக்கும் இடத்தில், பெருமைக்கும் புகழுக்கும் இடமில்லை. பொறாமை இல்லாத இடத்தில், சிறுமைக்கும் பழிக்கும் இடமில்லை.
ஆம்! பொறாமைப்பட்டு உயர்ந்தவரும் இல்லை; பொறாமைப்படாமல் தாழ்ந்தவரும் இல்லை.

நெருப்பிலே குளிர்ச்சியை எதிர்பார்க்கலாமா? அதுபோல்தான் பொறாமை உடையவர்களிடம் பெருமையை எதிர்பார்ப்பதும். தண்ணீரில் சுட்டெரிக்கும் வெம்மையை எதிர்பார்க்கலாமா? அதுபோல்தான், பொறாமை இல்லாத நல்லவர்களிடம் தாழ்வினை எதிர்பார்ப்பதும்!

அழுக்காறு இல்லாத தூயநெஞ்சங்கள், என்றும் பேம்பட்ட நிலையிலிருந்து தாழ்வதே இல்லை. பொறாமை கொள்ளாத மகாத்மா காந்தி அடிகளின் உயர்ந்த புகழுக்குத் தாழ்வு என்பதும் உண்டா? அழுக்காறு இல்லாத அறிஞர் அண்ணாவின் மேம்பாடு, என்றாவது குறையுமா? அந்த உத்தமர்களை நாம் என்றும் மதித்துப் போற்றத்தானே செய்வோம்!

"அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃது
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்" [இல்லார்

எனும் குறள் கொடுக்கும் குரல் வழி நடப்போம். பொறாமைக்குணம் விடுப்போம்! வெல்க, குறள் நெறி!

நன்றி: சென்னை வானொலி நிலையம்.

“காஞ்சி”

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 4—11—73 | இதழ் 17.

முற்போக்கு நடவடிக்கை

நாலு கோடித் தமிழர்களின் நலன் நாடும் தமிழக அரசு, நாட்டுடமைத் திட்டம் வெற்றி பெறுவதில் எத்துணை கண்ணுங் கருத்துமாகச் செயல்படுகிறது என்பதை நானிலம் அறியும்.

முற்போக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அகில இந்தியாவிலும் முன்னணியில் நிற்கும் மாநிலம் தமிழ்நாடு எனில் அது முற்றிலும் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

வங்கிகள் நாட்டுடமை, மன்னர் மான்ய ஒழிப்பு போன்ற முற்போக்குத் திட்டங்களில் இந்திரா அம்மையாரின் முத்திரையைக் கண்டு, மனம் மகிழ்பவர்கள் கூட, நில உச்சவரம்பு, உழுபவனுக்கே நிலம் சொந்தம், குடியிருப்பவனுக்கு மனை வழங்கும் திட்டம், பேருந்துகள் நாட்டுடமை போன்ற முற்போக்குத் திட்டங்களைத் துணிந்து செயல்படுத்தும் தமிழக முதல்வர் மாண்புமிகு தமிழவேள் **கலைஞர்** அவர்களின் திறன் கண்டு போற்றுகிறார்கள்; புகழ்கிறார்கள்.

ஆம்! இன்று பொதுவுடமைத் தத்துவம் பூக்கும் பூங்காவாகத் தமிழகத்தை ஆக்கிய பெருமை **அறிஞர் அண்ணா** வழி நடக்கும் டாக்டர் **கலைஞரையே** சாரும்.

தன் முற்போக்கு நடவடிக்கையில் மேலும் ஒரு மைல் கல்லாக, மாண்புமிகு முதல்வரின் அண்மைக் கால ஓர் அறிவிப்பு ஒன்று அமைந்துள்ளது கண்டு, வியந்து பாராட்டாதவர் இல்லை என்றே கூறலாம்.

தமிழகத்துப் படப்பிடிப்பு நிலையங்கள், திரைப்பட அரங்குகள் படிப்படியாக நாட்டுடமை ஆக்கப்படவிருக்கின்றன என்ற நற்செய்தியே அது.

முதல்வர் **கலைஞர்** அவர்கள், துணிவான இவ்வறிவிப்பால், தன் புகழ் மகுடத்தில் மேலும் ஓர் ஒளி மணியினைப் பதித்துள்ளார் அவர்.

செய்யவேண்டிய காலத்தில் செய்து முடிக்கவேண்டிய நற்பணி இதுவாகும். பொதுவுடமைத் தத்துவத்தின் மறுபதிப்பாகத் திகழும் முதல்வர் **கலைஞரின்** பணி தொடர்வதாகுக! அன்னாரின் புகழ் மேலும் ஒளிர்வதாகுக!

பேரறிஞர் அண்ணா அமைத்துக் கொடுத்த கொள்கை வழி, வெற்றி நடைபோடும் அவர் பின்னால் அணிவகுப்போமாக!

—**மணிவேந்தன்.**

★

வரிப்புலியே! வாழ்த்துக் கூறு!

வங்கனூர், புலவர் ந. கருணாநிதி

கங்கையுடன் காவிரியில் மூழ்க வில்லை
காசிமுதல் இராமேசு வரம்மற் றுள்ள
பொங்கிவரும் அலைபோதும் திருச்செந் தூரில்
புண்ணியத்தை விலைபோட்டு வாங்கவில்லை!
மங்கலிலாத் தமிழினத்தின் மேன்மை காக்க
மாத்தமிழின் புகழொளியைப் பரவச் செய்யத்
தங்குதடை யில்லாமல் உழைத்தல் செய்தாய்!
தரணியிலே நீயொருவன் தனித்து நின்றாய்!

கோபுரத்தின் உச்சிதனைக் கண்டு பக்தர்
கோவிந்தா என்றழைப்பர், நெஞ்சம் தோய்வர்!
நூபுரத்தின் எழிற்கொஞ்சும் பெண்ணைக் கண்டால்
‘நுண்ணிடையே! வா’ என்பர் இன்பங் காண்பர்!
தூபத்தால் சிலைகட்டும் உயிர்கள் ஊட்டத்
துணிந்திடுவார், பின்னவற்றைத் திருடல்
[செய்வார்!
ஆபத்து நம்மினத்துக் கென்ற றறிந்தால்
அலறியுனைப் போல்எவரே வந்தார் இங்கே?

பஞ்சுக்கு நெருப்பென்ன பகையா? நல்ல
பண்புக்கும் உயர்வென்ன தடையா? நீதி
நெஞ்சுக்கும் உலகென்ன எதிரா? வண்ண
நிலவுக்கு வானென்ன மாறு? கோழிக்
குஞ்சுக்குத் தாயென்ன எமனா? பெற்ற
கொள்கைக்குத் துணிவென்ன திரையா? கூடும்
மஞ்சுக்குக் கடலென்ன அழுமா? எங்கள்
மன்னவனே! உன்கொள்கை வெற்றி காணும்!

வரிப்புலியே! தம்பியரின் நெஞ்ச ஏட்டில்
வரைந்துவிட்ட பொன்னெழுத்தே!
[காலன் என்னும்
நரிப்பயலின் வாய்ப்பட்டாய்! ஆனால் என்ன?
நாங்களிதோ இருக்கின்றோம்! உனது கொள்கை
விரிப்பதற்கே என்றெண்ணு! விழிகள் தூக்கி
வெற்றிநடை போட்டிடுவோம்! பொய்யின்
[தோலை
உரிப்பவனே! அண்ணாவே! அறிஞர் கோவே!
உன்வழியில் தொடர்கின்றோம்! வாழ்த்துக் கூறு!

தாமரை மங்கை

புலவர் கபிலவாணன்

★

தெளிந்திருக்கும் நீர்வட்டக் குளத்தில் நிற்கும்
தெரிவையென முகங்காட்டும் மரைப்பூ மங்கை
களிப்புடனே சிரித்துக்கொண் டிருப்பாள்! காயும்
கதிரவனின் வாய்முத்தம் பெற்றுக் கொள்வாள்!
ஒளியினிலே மின்னுகின்ற தண்ணீர் முத்தை
ஒட்டாமல் இலைத்தட்டில் வைத்தி ருப்பாள்;
களிமிகுந்த வண்டினங்கள் அவளைச் சுற்றிக்
கவிபாட இளவரசி சுவைத் திருப்பாள்.

இருகைகள் வணங்குதற்குக் குவிந்த தைப்போல்
இளமையிலே சிறுமியென இருந்து விட்டுப்
பெருமளவில் பூப்படைந்து கமழு கின்றாள்;
பிறைநிலவைக் கண்டுவிட்டால் குனிந்து
கொள்வாள்!
மருநிறைந்த சேற்றினிலே பிறந்த செந்தா
மரைமகளோ மலர்களிலே அரசி யானாள்!
கரும்பச்சை நிறத்தண்டில் முட்கள் கொண்டாள்!
கயத்தினிலே நிற்கின்றாள் தவம்செய் கின்றாள்.

தண்ணீர்மேல் ஏற்றிவைத்த விளக்கைப் போல
தலைகாட்டிக் கொண்டிருக்கும் தாம ரைப்பூ,
பெண்முகத்திற் கொப்பில்லை எனநி னைத்துப்
பெருந்தவத்தைச் செய்கின்றாள் ஒற்றைக் காலில்.
வண்ணமகள் அல்லியினைக் கண்டு நொந்து
வாய்புதைத்து நிற்கின்றாள் பொறாமை யாலே!
கண்களுக்கு விருந்துவைக்கும் கமலம், எங்கள்
கம்பன்வாய்ப் பாராட்டும் பெற்றுக் கொண்டாள்.

கோயிலிலே கொலுவிருக்கும் சிலையைப் போலும்
குடும்பத்தில் அமைந்திருக்கும் தலைவி போலும்
வாயினிலே படுத்திருக்கும் நாக்குப் போலும்
வளமார்ந்த நூலுக்குச் சிறப்ப மைந்த
பாயிரம்போல் குளத்திற்கு அழகு செய்வாள்!
பகல்மட்டும் மகிழ்ந்திருப்பாள் இந்த கள்ளி.
ஆயிரந்தான் சொல்லியென்ன? எழில்சு மக்கும்
அன்னவளை விழிவாயால் சுவைத்துப் பார்ப்பீர்

உலக அரங்கில்

மழைக்காலத்தில் தயவு செய்து முத்தமிடாதீர்கள். என்று ஓர் அரசாங்கம் தனது மக்களைக் கோரி உள்ளது. விந்தையாக இல்லையா?

பிலிப்பைன்ஸ் தலைநகரான மணிலா நகர சுகாதாரத் துறை இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

''மழைக்காலத்தில் 'ப்ளூ'ஜுரம் வரலாம். ஒருவரை ஒருவர் முத்தமிடுவதன் மூலம் இந்த 'ப்ளூ' வேகமாகப் பரவி விடக்கூடும். ஜலதோஷமும் தொற்றிக் கொள்ளும். எனவேதான் மழைக் காலம் முடியும்வரையில் முத்த மிடாமல் இருப்பது நல்லது'' என்று இந்த இலாகா அறிவித்துள்ளது.

ஃ ஃ ஃ

உடல் வளர, ஐயோடின் உப்பு சாப்பிடுங்கள். ஜெர்மன் நிபுணர்கள், இந்த யோசனையை கூறியுள்ளனா.

சிலருக்கு குரல்வளைச் சுரப்பி வீக்கம் ஏற்பட்டிருந்தால், அவர்கள் உணவில் ஐயோடின் உப்பு குறைந்த அளவில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தம். பொதுவாக கடலோரமாக குடியிருக்கிற மக்களுக்கு இவ்வித குறைபாடு ஏற்படுவதில்லை.

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் தென் பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டில் ஆயிரக் கணக்கான மக்கள் குரல் வளைச் சுரப்பி வீக்க நோயினால் அவதிப்படுகிறார்கள். இவர்கள் ஆகாரத்தில் 36 மைக்ரோகிராம் ஐயோடின் உப்பு மட்டுமே காணப்படுகிறது மக்களின் தேவையில் இது பாதிதான். இமயமலைப் பகுதிகளிலும், வேறு பல இடங்களிலும் மனிதனின் வளர்ச்சி குன்றி குட்டையாகவும், குரல்வளைச்சுரப்பி வீக்கத்துடனும் இருப்பதற்குக் காரணமும், போதுமான ஐயோடின் உப்பு உட்கொள்ளாததேயாகும். தினசரி உணவில் ஐயோடின் உப்பை அவசியம் சேர்க்க வேண்டும் என்று ஜெர்மன் மருத்துவ பீட்டர்ஸ் கிரிபா வற்புறுத்தியிருக்கிறார்.

ஃ ஃ ஃ

பித்தப்பையில் 'கல்' உருவானால், மனிதன் வலியினால் துடிதுடித்துப் போவான் இவ்வித பித்தப்பை கற்களை கொஞ்சம் கொஞ்சமாக கரைத்து மனிதனுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய புதிய கலவை ஒன்றை ஜப்பான் மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர் ஜப்பான் அறுவை சிகிச்சை நிபுணர்கள் மாநாட்டில் கியூஷு பல்கலைக் கழக மருத்துவ ஆராய்ச்சி நிபுணர்கள் இந்தக் கண்டுபிடிப்பை அறிவித்தனர்.

கொழுப்பு காரணமாகவும், பித்தப் பையில் கற்கள் உருவாவது உண்டு. இவ்வித கற்களை அகற்றுவதற்கு, இதுவரை எவ்வித மருந்தும் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தது. ஜப்பான் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ள புதிய கலவையை பயன்படுத்தினால், நல்ல பலன் கிட்டும் என்று மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த கலவைத் தண்ணீரில் கரையக்கூடியது பித்தநீர் குழாய் வழியாக, இப்புதிய மருந்தைச் செலுத்தினால், கற்கள் கரைந்துவிடும்.

தொகுப்பு : எழிலரசன்

தம்பி,

படம் எடுக்கப் போகிறார்களாம்—ஒன்று அல்ல, மூன்று; "உண்டானபோது கோடானுகோடி" என்று பழமொழி சொல்லுவார்களல்லவா. அதுபோல செல்வமும் செல்வர்களின் ஆதரவும் இருக்கும்போது மூன்று, முப்பது படம்கூட எடுக்கலாம். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்! பட முதலாளிகளின் பார்வை குளிர்ச்சியாக இருக்கும்போதே, படங்களை 'மளமள'வென்று எடுத்துவிட வேண்டியதுதானே!! செய்யப்போகிறார்கள்! அறிவித்து விட்டார்கள். சென்னையில் உள்ள மூன்று படப்பிடிப்புத்துறை முதலாளிகள், காங்கிரஸ் கட்சிக்காகத் தேர்தல் பிரசாரப் படம் தயாரித்துத்தர முன்வந்துள்ளார்கள்!

சினிமாக் கட்சி, சினிமாக் கட்சி என்று நமக்குப் பெயர் தம்பி!—பெயரா?—ஏளனப் பேச்சு வீச்சு—ஆனால் நாமல்ல, காங்கிரசுதான் சினிமாப் படங்களைத் துணையாகப் பெறப்போகிறது–நடிக நடிகையர்—படப்பிடிப்புத்துறைத் தொழில் நிபுணர்கள் தயாரிக்கப்போகும் படங்கள் அல்ல — மூன்று வளமான படப்பிடிப்பு அமைப்புகள் — தயாரிக்கப் போகும் படங்கள்!

முதலாளிகள் தயாரிக்கும் படங்களா? என்று முகத்தைச் சுளித்துக்கொள்ளாதே, தம்பி! சோஷியலிசத்துக்கு ஆதரவான படமாகத்தான் எடுக்கப் போகிறார்கள்!

முதலாளிகளை ஒழிப்போம்! தொழிலாளிகளை வாழவைப்போம்!—என்ற ஊர்வலக் காட்சியைக் கூடக் காணக்கூடும். படம், தம்பி! படம்!!

பணம்! அண்ணா! பணம்!!—என்று நீ கூறுவது என் காதிலே விழத்தான் செய்கிறது. ஆனால் எனக்கு இதிலே உள்ள மகிழ்ச்சிக்குக் காரணம் தெரியுமா, சினிமாவைக் கேவலமாகவும், சினிமாத்துறையினருடன் தோழமைத் தொடர்புகொள்வதை இழிவானதாகவும், தரக்குறைவான அரசியல் கட்சிகளே அப்படிப்பட்ட தொடர்பு கொள்ளும் என்றும் கூறிக் கொண்டுவந்த காங்கிரஸ் கட்சி, இப்போது கலை உலகின் தயவைப்பெற முனைவது இருக்கிறதே, அது கலை உலகின் வெற்றி! கலைஞர்களின் வெற்றி! என் பாராட்டுதல் அந்தக் கலைஞர்களுக்கு—என்னையும் கழகத்தையும் எதிர்க்கும் கலைஞர்களுக்குக்கூட! 'இருமல் தும்மல்' எல்லாம் என்னை ஏசும்போது, கலை உலகினர் நாலு வார்த்தை என்னையும் கழகத்தையும் ஏசிப் பேசுவதாலா எனக்கு எரிச்சல் வரப்போகிறது? இராகம் — தாளம் — பாவம் குறையாத பேச்சாகவாவது இருக்குமல்லவா!

சினிமாக் கட்சி, சினிமாக் கட்சி என்று நமது கழகத்தை, ஏ! அப்பா! அங்கு இடம் கிடைக்காத எரிச்சல் கொண்டதுகளெல்லாம் முன்பு பேசுவார்களே! அவர்களுடைய முழக்கத்தில் சரிபாதி இது பற்றித்தானே! இப்போது? எப்படிப் பேச முடியும்? ஆகவே, தம்பி! நன்றாக ஆராய்ந்து பார்த்திடின், காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்துள்ள கலைஞர்கள் நம்மீது அந்தக்கட்சி பூசிவைத்த கறையைத் துடைத்திடும் தொண்டாற்றி, கழகத்துக்குத்தான் நல்லது செய்கிறார்கள்! அதனால்தான், நான் எங்கிருந்தாலும் வாழ்க!—என்று உளமாறக் கூறி வருவது.

சினிமாப் படங்களைக் காங்கிரசின் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்த முனைவது, ஒருவகையில், கலை உலகின் வெற்றி, கலைஞரின் வெற்றி. நமக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்பதால், அதனைக் குறைத்து மதிப்பிட, நாம் யாரும் ஏமாளிகள் அல்ல.

கலைஞர்களின் தோழமையும் தொடர்பையும், குறைத்து மதிப்பிட்டவர்கள், கேவலமாகப் பேசியவர்கள் அவர்கள், நாம் அல்ல! இன்று அந்த தொடர்பு தக்க பலன்தரும் என்ற பூரிப்புடன் உள்ளவர்கள் அவர்கள்!! கலைஞர்களின் தொடர்பு பற்றி மிகக் கேவலமாகக் காங்கிரஸ் தலைவர்கள்—பேச்சாளர்கள் மட்டுமல்ல—பெருந்தலைவர்கள்—தாக்கியபோது தம்பி! நாம் நினைவுபடுத்தினோம்,

காங்கிரஸ் தூய்மையான விடுதலை இயக்கமாக இருந்தபோது, நாடகத்துறை வித்தகர் விசுவநாத தாசும், கொடுமுடி சுந்தராம்பாள் அவர்களும், வேறு பல கலைஞர்களும் காங்கிரசுக்காகப் பாடுபட்ட பான்மையை! அப்போதும் காங்கிரசின் பெருந்தலைவர்கள் கலைஞர்களை மதிக்க மறுத்தனர்; 'கூத்தாடிகள்' என்று கேவலமாகப் பேசினர்! இன்று? கலையின் வலிவை உணருகிறார்கள்! கலைஞர்களின் தொடர்பைப் போற்றுகிறார்கள்! வரவேற்கத்தக்க வெற்றி—கலை உலகுக்கு. படம் காட்டப்போகும் பாடம் இதுவே.

காங்கிரசின் சாதனைகளை இந்தப் படங்கள் எடுத்துக் காட்டுமாம். காட்டட்டும்; ஆனால் சர்க்காரைக் காங்கிரஸ் கட்சி நடத்திக்கொண்டு வருவதால், சர்க்கார் செய்திடும் சாதனைகள்பற்றி—அணைக்கட்டுகளிலிருந்து ஆரம்பப் பள்ளிகள் வரையில் செய்தித்துறை தொடர்ந்து படங்களை வெளியிட்டு வருகின்றனவே—அவை போதாமலா, புதிதாகத் தேவைப்படுகிறது? விந்தைதான்! தரமாகவே அமைந்திருக்கிறது செய்தித்துறைப் படம்!

உருக்கமான குரலொலி கேட்கிறது, வறண்ட பூமி! வெடித்துக்கிடக்கும் வயல்கள்! துடித்திடும் மக்கள்! வானத்தை அண்ணாந்து பார்க்கிறார்கள்! கண்ணீர் வடிக்கிறார்கள்!!

உடனே ஒரு அணைக்கட்டுக் காட்சி! தண்ணீர் குபுகுபுவெனப் பாய்ந்தோடி வருகிறது!! பூமி குளிர்கிறது! பயிர் வளர்கிறது! இப்படி ஒரு இன்பக்காட்சி!

இவைகளைப் பார்க்கவில்லையா மக்கள்? நிரம்ப! பார்த்து? படத்திலே உள்ள பசுமை வாழ்க்கையிலே இல்லையே என்று ஏக்கம் கொள்கின்றனர்.

புதிதாக இதுபோன்ற படங்களை வெளியிட்டு, மக்களின் ஏக்கத்தைத் துடைத்திடவா முடியும்.

தம்பி! **நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன்** அவர்கள் '50—60' என்று ஒரு காட்சியைத் தமது படம் ஒன்றில் இணைத்துக் காட்டினார். பலர் பார்த்திருக்கக்கூடும்!

சுதந்திரம் வந்ததென்று சொல்லாதிங்க,
சும்மா சும்மா வெறும் வாயை மெல்லாதிங்க

என்று திருமதி டி. ஏ. மதுரம் பாட, நகைச்சுவை மன்னர், பத்தே வருடங்களில் சுதந்திரத்தின் பலனாக நாடு எத்தகைய பூந்தோட்டமாக மாறப் போகிறது பார் என்று பெருமிதத்துடன்கூறி, எதிர்கால வளம் பற்றிய எழில் மிக்க காட்சிகளைக் காட்டுவார். பார்த்தவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால். நல்லவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் நாசமாகிவிட்ட நிலையில், காங்கிரசின் சாதனைகளை விளக்கிட மூன்று புதிய படங்களை எடுத்துப் போட்டுக் காட்டி விடுவதால், மக்கள் குதூகலமடைந்து காங்கிரசுக்கே எமது ஓட்டு என்று கூறிவிடுவர்.

படம் பார்த்துவிட்டு வந்ததும், படி அரிசி எட்டணா என்ற அளவுக்காவது விலை கட்டுப்படுத்தப் பட்டிருக்கும் நிலையும் கண்டால், மகிழ்ச்சி அடைவார்கள்!

புதிய புதிய அணைக்கட்டுகளைக் காண்க! அமோகமான விளைச்சல் காண்க! என்ற பேச்சும் காட்சியுமா, காய்ந்த வயிறுக்குத் திருப்தி தந்துவிடும். பார்த்தால் பசி தீருமா!

இது காங்கிரஸ் தலைவர்களுக்கும் தெரியும். பட முதலாளிகளுக்கும் தெரியும். ஆகவே அந்தப் படங்கள், காங்கிரசின் சாதனைகளை எடுத்துக் காட்டுவதாக மட்டும் இருந்திடப் போவதில்லை; எதிர்க் கட்சிகளை—குறிப்பாகக் கழகத்தை—வெகு சிறப்பாக என்னைக் கேவலப்படுத்திடும் கேலி செய்திடும் காட்சிகள் கொண்டதாக இருக்கும்.

சென்ற பொதுத்தேர்தலின்போதும் இது போன்ற 'படம்' காட்டினார்கள்! முறை, பழையதுதான்! பலனும், முன்புபோலத்தான் இருக்கும். ஆனால் இம்முறை, நம்மைத் தாக்குவதில் சற்று வேகம்—காரம்—சூடு—அதிகம் இருக்கும். அதாவது நம்மைத் தாக்குவதற்காக அவர்கள் தமது படைக்கலன்களை மேலும் கூர்மையுள்ளதாக்கிக் கொள்ள வேண்டி வருகிறது!! இந்நிலை, படைக்கலன்களுக்கு அல்ல, நமக்குக் கிடைத்துள்ள 'தாங்கும் சக்தி'க்குத்தான் பெருமை தருவதாகும்.

அண்ணா! அவர்கள் படம் எடுக்கப் போகிறார்களாமே. நாம்?—என்று ஆவலோடு கேட்டார், ஒரு தம்பி!

நமக்கும் சேர்த்துத்தானே அந்தப் படங்கள்? என்றேன் நான்.

என்ன அண்ணா! புதிர் போடுகிறீர்கள்—என்று கவலை ததும்பக் கேட்டார், தம்பி.

தம்பி! படம் பார்த்தவர்கள், பகலில், கடைவீதி போவார்கள் அல்லவா? விலை ஏற்றம் கொட்டுமல்லவா? அப்போது அவர்கள் என்ன எண்ணிக் கொள்வார்கள்? படம் காட்டினார்கள் படம்! பாலும் தேனும் ஓடுகிறது! நாங்கள் சாதிக்க வேண்டியவைகளைச் சாதித்துவிட்டோம் என்று பாடிக் காட்டினார்கள்; இங்கேயோ...!-என்று பேசி பெருமூச்சு விடுவார்கள் அல்லவா?—என்றேன். ஆமாம் என்றார் தம்பி! அந்தப் பெருமூச்சு, காங்கிரசுக்கு ஓட்டா வாங்கித் தரும்? என்று கேட்டேன். தம்பி புன்னகை புரிந்தார். அதனால்தான் தம்பி! நான் கூறினேன், படம் நமக்கும் சேர்த்துத்தான் என்று—என்று கூறினேன். சரிதானே!!

தம்பி! ஒரு கட்சி, ஆட்சியை நடத்திய நிலையில், தன் சாதனைகளை எடுத்துச் சொல்ல முனைவது ஒன்றே மக்கள் அந்தச் சாதனைகளைச் சாதனைகள் என்று ஒப்புக்கொள்ளவில்லை அல்லது உணரவில்லை என்பதற்குச் சான்றுதானே?

போகட்டும்; தம்பி! காங்கிரசின் சாதனைகளைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல, காங்கிரசாட்சியிலே நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள வேதனைகளைப் படம் பிடித்துக் காட்டினால், 'கத்திரிக்கோல்' சும்மா இருக்குமா?

மூன்று படம் எடுக்கப் போகிறார்களே முதலாளிகள், அவர்களுக்கே தெரியும்! மிக நன்றாகத் தெரியும்!!

ஒருபுறம் நான்! எதிர்ப்புறம், கனம். சுப்பிரமணியம்! அவர் ஆத்திரத்துடன்! நான் அச்சத்துடன்!

அவர் கேட்கிறார், 'ஏ! அண்ணாத்துரை, என்னை கசாப்புக் கடையா வைக்கச் சொல்லுகிறாய் என்று'—உடனே ஒரு காங்கிரஸ் படை, இடி இடியெனச் சிரிக்கிறது—கையொலி எழுப்புகிறது. ஒரு காட்சி! அதை அடுத்து "இதோ பாரீர்!" என்று ஒரு குரல்! மலர்ந்த முகத்துடன் ஒரு காங்கிரஸ் தலைவர்-ஆவல் ததும்பும் கண்களுடன் மக்கள்—என்ன? என்ன? என்ற கேள்வி ஒலி! "எமது சாதனை! நாலாவது திட்டத்தில்!!" என்று பெருந்தலைவரின் பெருமிதப் பேச்சு! எதிரே பார்த்தால், குட்டிகள் பலவற்றுடன் பன்றிகள்!! என்ன இது? என்று ஒருவரின் கேள்வி—தயக்கத்துடன்! பன்றிப்பண்ணை! பன்றி இறைச்சிக்கு நிரம்பகிராக்கி. ஆகவே பன்றிப் பண்ணை! இரு துறையிலும்! தனியார் துறையிலும்! —பொதுத் துறையிலும்!-என்றவிளக்கம். காட்சி, படமாக்குவது எளிது! பொய் அல்ல; புனைசுருட்டு அல்ல! நாலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பல இடங்களில் பன்றிப் பண்ணைகள் வைக்கப் போவதாக, பல தினங்களுக்கு முன்பே இதழ்களில் செய்தி வெளிவந்தது. உண்மையைத்தான் படமாக்குகிறோம். ஆனால் கத்திரிக்கோல்? சும்மா இருக்குமா? கலை உலகினர் அனைவரும் அறிவர்!

ஆகவே அவர்கள் படங்கள் மூலம் எதிர்க் கட்சிகளைக் கேவலப்படுத்த முயலுவது, கட்டுடல் படைத்த காளையை இரும்புத் தூணிலே இறுகக் கட்டிவைத்து விட்டு, வலிவும் துணிவுமற்ற பேர்வழி, 'அடி அடி'யென்று அடிப்பதற்கு ஒப்பானது. கலைஞர்கள் அறிவார்கள்!!

பாலோ! பால்! என்று அழும் தாயைக் காட்டலாம்; பால் கிடைக்காது அலைந்து அலுத்துப்போன தகப்பனைக் காட்டலாம்! ஒரு காங்கிரஸ் தலைவர் படத்தைக் காட்டலாம். பாலும் தேனும் கலந்து ஓடும்!—என்று அவர் முன்பு முழக்கமிட்டது அந்த ஏழையின் காதில் விழுவது போன்ற நிலையைக் காட்டலாம். எங்கிருந்தோ ஒரு கழுதைக் குரல் கிளம்புவதைக் காட்டலாம். அன்றைய இதழில், கொட்டை எழுத்தில் கழுதைப் பாலைச் சாப்பிடலாம்—ருசியானது—வலிவுதரவல்லது என்று அமைச்சர் ஒருவர் பேசியிருப்பது வெளிவந்திருப்பதைக் காட்டலாம். ஏழை, தன் வேதனையையும் மறந்து, கழுதைப் பால்! கழுதைப் பால்! காங்கிரஸ் நமக்குத் தருவது கழுதைப் பால்!--என்று கூவிச் சிரிப்பதைக் காட்டலாம். எளிதான காரியம்! எடுக்க விடுவார்களா? கத்திரிக்கோல் சும்மாவா இருக்கும்.

அதிகமாகக்கூட நாம் கஷ்டப்பட்டு கற்பனை செய்துகொண்டிருக்கத் தேவையில்லையே. தம்பி! கொடி பிடித்த வீரர்கள், நாலாவது ஐந்தாண்டுத் திட்டம்! நாட்டுக்கு சுபிட்சம் தரும் திட்டம்! என்று முழக்கமிட்டபடி ஊர்வலம் செல்வதைக் காட்டிவிட்டு, ஒரே ஒரு எலி, பயத்துடன் வளைக்குள்ளே நுழைவதையும், அதை ஆவலோடு தனி காங்கிரஸ்காரரும், ஒரு பூனையும் பார்த்திடும் காட்சியையும் காட்டி, அன்றைய இதழில், காங்கிரஸ் அமைச்சர் கொண்டாசிங் என்பவர், 'எலி சத்துள்ள உணவு', சாப்பிடலாம்: என்று உபதேசம் செய்தாரே அந்தச் செய்தி வெளிவந்திருப்பதையும் காட்டினால் போதுமே! கொட்டகை அதிருமே!! ஆனால், எடுத்திட விடுவார்களா?

ஆக, நமது கரங்களைக் கட்டிப் போட்டுவிட்டு, அவர்கள் தமது சாதனைகளை விளக்கிடும் படம் காட்டப்போகிறார்கள். காட்டட்டும்! பாவம்! அந்த ஆசையும் தீர்ந்துபோகட்டும்!!

நாம் படம் எடுத்துக் காட்டாமலேயே, நாட்டிலே உள்ள வேதனைக் காட்சிகளைக் கண்டு கண்டு வெதும்பிப் போயுள்ள மக்கள் இதயத்தில் அந்தக் காட்சிகள், துளியும் கலையாமல் இருக்கத் தான் செய்கின்றன!!

ஏதோ ஒரு பத்திரிகையில்—தமிழ்நாட்டு இதழிலேதான்—பார்த்தேன் — என்னையும் ராஜாஜி, காயிதேமில்லத் ஆகியோரையும் ஒரு கழுதைமீது உட்காரவைத்திருப்பதுபோல, ஒரு கேலிச்சித்திரம். என்னோடு தோழமைத் தொடர்பு கொண்டதற்காக, மதிப்புக்குரிய அந்த இரு பெரியவர்களுக்கும் ஒரு இதழ் இத்தகைய கேவலத்தை ஏற்படுத்திக் காட்டி இருக்கிறதே என்று எண்ணி மெத்த வருத்தப் பட்டேன்.

இதழிலே இது என்றால், படத்திலே இதனை விடக் கேவலமான காட்சிகளையெல்லாம்கூட இணைத்துக் காட்டலாம்—காட்டட்டும்! எடுத்துக் கொண்டுள்ள காரியத்துக்குத் தரவேண்டிய 'விலை' இவை என்றுதான் கருதிக்கொள்வோம். ஆனால் மக்கள்? காங்கிரசின் காவலர்களாகத் தம்மைக் கருதிக்கொண்டுள்ளவர்கள் மேற்கொள்ளும் இத்தகைய செயலை, கண்ணியமானது என்று கருதுவார்கள்? மக்கள் அவ்வளவு இழிதன்மை கொண்டவர்கள் அல்ல!

தம்பி! நான், மக்களுடைய அந்தப் பண்பிலே தான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்; மிகுந்த நம்பிக்கை. அவர்களிடந்தான் முறையிடுகிறேன். மக்களிடம், அவர்கள் உணரும்படியான அளவிலும் முறையிலும் இந்த முறையீடு போய்ச் சேருமானால் அவர்கள் நீதியின் பக்கம் திரண்டெழுந்துவந்து நிற்பார்கள் என்று திடமாக நம்புகிறேன். வரலாற்று ஏடுகள் எனக்குள்ள அந்த நம்பிக்கையை மேலும் வலுவுள்ள தாக்குகின்றன. ஆகவேதான், இந்தத் தொண்டு வெற்றிபெற, தம்பி! நீ உன்னை முழுக்க முழுக்க ஒப்படைத்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதனைகள்! தம்பி! சாதனைகளை மதிப்பிட வேண்டுமானால், ஒரு கட்சி நடத்திக் காட்டிய சாதனைகளுடன் வேறோர் கட்சி நடத்திக்காட்டிய சாதனைகளை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்; அந்த இருகட்சிகளும் ஆட்சி நடத்தியநிலை இருந்திட வேண்டும்.

திறமை—வலிவு—செல்வாக்கு—அறிவு—பண்பு—எனும் எவைபற்றிய மதிப்பீடு போடுதென்றாலும் குறைந்தது இருவர்களின் நிலையையாவது கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒப்பிட்டுப்பார்த்து, இவரைவிட அவர் திறமைசாலி ஆனால் வலிவு இவருக்குத்தான் அதிகம் என்ற இந்த முறையில்தான் மதிப்பீடு தர முடியும்; அதுதான் பொருள் உள்ளதாகவும்—பொருத்தமானதாகவும் இருக்கும்.

எடுத்துக்காட்டு வேண்டுமெனின் இதனைக் கூறலாம். இங்கிலாந்து நாட்டில் இன்று அரசாளும் தொழிற் கட்சியின் சாதனைகளை, முன்பு அரசாண்ட

கன்சர்வெடிவ் கட்சியின் சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து எந்தக் கட்சியின் சாதனைகள் சிலாக்கிய மானவை என்று கண்டறிந்து கூறுவது.

இந்த வாய்ப்பு, புறநாடுகளிலே உள்ளதுபோல இங்கு இல்லை.

இங்கு தொடர்ந்து காங்கிரஸ்கட்சியே ஆட்சி யில் இருந்து வருகிறது. ஆகவே மக்களுக்கு நலன் தரத்தக்க சாதனைகள் செய்தளிப்பதில் எந்தக் கட்சி தரமானது, எந்தக்கட்சி அவ்வளவு தரம் இல்லாதது என்று கூறிட இயலாது; ஒப்பிட்டுப் பார்த்திடும் வாய்ப்பு இல்லாததால்.

ஆகவே காங்கிரசாரும் அவர்தம் ஆதரவாள ரும், சாதனைகள்—சாதனைகள்—என்று பேசும்போது, ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொண்டவர்கள் ஒன்பது பேர், அதிலே முதலாவதாக வந்தவன் முத்துச்சாமி, இரண்டாவதாக வந்தவன் இருதயசாமி என்று கண்டறிந்து கூறுவதுபோலக் கூறவில்லை; கூறிடும் வாய்ப்பு இல்லை.

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை— என்பார்கள்! அதுபோல, வேறு எந்தக்கட்சியும் ஆட்சிப் பொறுப்பினைப் பெற்றிடாத நிலையில், ஆட்சி நடத்திடும் ஒரே கட்சியான காங்கிரஸ் சாதனை! சாதனை! என்று கூறிவருகிறது.

உண்மையான மதிப்பீடு தெரியவேண்டுமானால், இன்று காங்கிரஸ் நடத்திடும் ஆட்சி, வேறோர் கட்சி யிடம் கிடைத்து, அந்தக்கட்சி என்னென்ன சாதனை களைப் பெற்றுத் தருகிறது என்று பார்த்து, இரண் டையும் ஒப்பிட்டு, எது தரமுள்ளது என்று தீர்மா னிக்கவேண்டும். அதற்கு இந்த இருபதாண்டுகளாக வழி இல்லை இன்னும் இருபதாண்டுகளுக்குவழியில்லை என்கிறார் காமராஜப் பெரியவர்.

அதாவது வேறோர் கட்சியின் திறமையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைக்கக் கூடாது என்று விரும்புகிறார். அந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே திட்டமிட்டு வேலை செய்துவருகிறார்.

மக்கள் அளித்திடும் தீர்ப்பைப் பொறுத்து இருக்கி றது அவர் திட்டம், ஆனால், 'போட்டி' கூடாது!!— என்கிறார்.

குழந்தை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடுகிறான் என்பார்கள்; வேறு எந்தக் கட்சியும் ஆட்சி நடத்த விடக்கூடாது என்று திட்டமிடுவது, அத்தகைய விளையாட்டிலே உள்ள விருப்பம் காரண மாகப்போலும்!

அது எப்படியோ போகட்டும்; ஆனால், வேறு ஒரு கட்சியின் ஆட்சி ஏற்பட்டு, அப்போது கிடைத் திடும் சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலொழிய காங்கிரசின் சாதனைகளைப் பற்றிப் பெருமிதத்துடன் பேசுவதிலே பொருள் இல்லை! ஆனால் பேசுகிறார்கள்!

"பயலே! என்னைப்போல மீசையை முறுக்கிவிட உன்னால் முடியுமா?" என்று கேட்டான் பக்கிரி; வயது நாற்பது; பனிரெண்டு வயது சிறுவனைப் பார்த்து

"சித்தப்பா! எனக்கு இப்போதுதான் மீசை கருக்குவிடுகிறது! இதற்குள்ளே வம்பு பேசுகிறாயே! காலம் வரட்டும்! மீசை கொத்து கொத்தாக வளரும். அப்போது நான் முறுக்கிக் காட்டுகிறேன். அப்போது தெரியும், மீசையை முறுக்கிவிடுவதில், நம் இருவரில் யார் வல்லவர்கள் என்பது. இப்போது பேசி என்ன பயன்! ஆனால் சித்தப்பா! இதையும் தெரிந்து கொள். எனக்கு, முறுக்கிவிடும் அளவு மீசை வளரும் காலத்தில், உனக்கு உள்ளது உதிர்ந்து போய்விடும்'' என்றான் சிறுவன். கதையில்!

நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள், நாட்டு மக்களை விவரம் அறியாதவர்கள் என்ற நினைப்பில்— இதோ பார், காங்கிரசின் சாதனைகளை! காட்டு உன் சாதனைகளை!!"—என்று!

ஆட்சி என் கரம் வரட்டும், அப்போது நான் செய்தளிக்கும் சாதனைகளைக் காணலாம்; உன் சாதனைகளுடன் ஒப்பிட்டும் பார்க்கலாம் என்று கழகம் கூறுகிறது. உடனே காமராஜர் கடுங்கோபம் கொண்டு, "மூஞ்சியைப் பார்! முகரக் கட்டையைப் பார்'" என்று பேசுகிறார். உலகிலே பாதி சுற்றி விட்டாரல்லவா! அதற்கு அடையாளம்போல விளங்கும் உயர்தரமான பேச்சு!!

இவர்கள் இந்த நினைப்புடன் இருப்பது மட்டு மின்றி, மக்களிடம் சென்று, நாடாள காங்கிரஸ் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் யோக்யதை கிடை யாது என்று பன்னிப் பன்னிப் பேசி வருவதைக் கேட்ட பிறகுதான் நான், சென்னை கூளையில் நடை பெற்ற கூட்டத்தில் கேட்டேன், வேறு எந்தக் கட்சிக்கும் நாடாளும் யோக்யதை இல்லையென்றால், எதற்காக 8 கோடி ரூபாய் செலவிட்டு, பொதுத் தேர்தல் நடத்துகிறீர்கள் என்று. உடனே 'பத்து ஆண்டுகளுக்கு முன்பே சஷ்டியப்த பூர்த்தி'யைக் கண்ட பேட்டையார் சே! சே! இதுகூடவா தெரிய வில்லை! மக்களுடைய கருத்தை அறியத்தான் பொதுத்தேர்தல் நடந்துகிறோம் என்று பேசுகிறார். திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்துகிறார்.

நாடாளும் யோக்யதை எந்தக் கட்சிக்கும் இல்லை என்ற பேச்சு, ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல என்பது என் வாதம்.

அதனைப் புரிந்துகொள்ள விடவில்லை, பதவி! எதை எதையோ பேசவைக்கிறது. எது பேசினாலும் 'ஜீரணமாகும்'—பதவி காரணமாக!!

சாதனைகளைக் கணக்கிட, மதிப்பிட, தேவை யான சூழ்நிலை இல்லாதபோது, காங்கிரஸ் தன் சாதனைகளைப் படமாக்கினாலும் சரி, பாட்டு ஆக்கினா லும் சரி, அது பாதிக் கதையே தவிர, 'முழுவதும்' ஆகாது.

ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பைப் பெற மக்கள் இம்முறை முனைந்திருக்கிறார்கள் என்பது என் கருத்து.

மற்றோர் கட்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத நிலையிலும், இந்தச் சாதனைகளை மதிப்பிட, ஒரு வழி இருக்கிறது. என்ன அவ்வழி எனில், இவர்கள் அரசாண்டு வரும் இதே காலத்தில், பிற நாடுகளிலே அரசாள்பவர்கள் பெற்றுள்ள சாதனை களுடன் ஒப்பிட்டுப் பார்த்து மதிப்பிடலாம்.

அதற்கு அழைத்தாலோ, அவர்கள் அதெப்படி ஒப்பிடலாம்! வேறு நாடு! வேறு சூழ்நிலை! அந்த

மக்களே வேறு! அவர்களுக்கு இருந்த சூழ்நிலையே வேறு! என்று பேசுகிறார்களே; சிலர்; சில வேளைகளில்.

இவர்கள் குறிப்பிடுவனவற்றை யெல்லாம் கணக்கில் வைத்துக்கொண்டு ஒப்பிட்டுப் பார்த்து, இந்த நாட்டிலே இவர்கள் மூலமாகக் கிடைத்த சாதனைகளை மதிப்பிட்டவர்கள் என்ன கூறி இருக்கிறார்கள்? அவர்கள். ஆட்சியைப் பிடித்திட அலைபவர்கள் அல்ல! நாற்காலிப் பைத்யம் பிடித்தவர்கள் அல்ல!!

மேற்கத்திய நாடுகளைக்கூட கணக்கில் எடுக்காமல், புதிதாக விடுதலைபெற்ற கிழக்கத்திய நாடுகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு மதிப்புத் போட்டதில், இந்தோனீஷியா தவிர பிற எல்லா நாடுகளேயும்விட, நம்நாடு எல்லாத் துறைகளிலும் ஒருசேர, பிற்போக்காக இருக்கிறது என்றும், இதே வேகத்தில் முன்னேற்றம் இருந்திடுமானால், ஜப்பான் வளம்பெற 130 ஆண்டுகளுக்கு மேல் ஆகுமென்றும், புது டில்லியில் சில தினங்களுக்கு முன்பு கூடிய, பல்வேறு நாட்டுப் பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இதெற்கென்ன சொல்லுகிறார்கள்? சாதித்தோம், சாதித்தோம் என்று சொன்னால் போதுமா? சாதித்திடும் திறமை இருந்தால், இவர்களேப்போலவே, ஏகாபத்தியப் பிடிப்பில் இருந்து விடுதலைபெற்று, சுதந்திர வாழ்வுபெற்று, ஆட்சி நடத்திய பல கிழக்கத்திய நாடுகள் பெற்ற வளர்ச்சியை ஏன் இங்கு பெறமுடியவில்லை? திறமைக் குறைவுதானே காரணம்?

அந்த ஆய்வாளர்கள் கணக்கில் எடுத்துக் கொண்ட எந்த நாட்டிலாகிலும் போட்ட திட்டங்கள், ஏழைகளுக்குப் பலன் அளிக்கவில்லை; பணக்காரர்களுக்கே அந்தப் பலன் போய்ச் சேர்ந்தது என்று கூறிக் கைபிசைந்து கொள்கின்றனரா?

இங்குதானே, காமராஜரே கூறுகிறார், "ஆமாம்! திட்டத்தின் பலன் ஏழைக்குக் கிடைக்கவில்லை" என்று; வேறு யாரோ, திட்டத்தை நடத்தியது போலவும் இவர் வேறு மண்டலங்களிலே சஞ்சரித்துவிட்டு இப்போது தான் இங்கு வந்திருப்பதுபோலவும்!!

சமைக்கவே தெரியாதவள்; அவள் தயாரித்த சாப்பாட்டைச் சாப்பிட்டு, கணவன் சலித்துப் போனான்; முகத்தைச் சுளித்துக்கொண்டான். அப்போது அவள் சொன்னாலும். "நான் சமைப்பது நன்றாகத்தான் இல்லை! எனக்கேகூடத்தான் பிடிக்கவில்லை. அதற்காக நான் உங்களேப்போலவா முகத்தைச் சுளித்துக்கொள்கிறேன்" என்று.

அது, கணவன்—மனேவி கதை! இவருமா அது போலப் பேசுவது,

ஆமாம்! திட்டத்தின் பலன், ஏழைக்கும் கிடைக்கவில்லை. எனக்கேகூடத்தான் தெரிகிறது ஆனல் அதற்காகக் குறைகூறுவதா! நான் குறை கூறுகிறேனு?

என்று. ஆனல் பேசுகிறாரே! அதைச் சாதனே என்றும் காட்டுகிறாரே! ஆய்வாளர்களோ, வேறு எந்த நாட்டிலும் இல்லை, இந்த அளவுக்குத் திறமைக்குறைவு என்கிறார்கள்.

இத்தகைய ஆய்வுரைகளை உரைகல்லாகக் கொள்ளலாம், இவர்களின் சாதனேகளை மதிப்பிட,

இந்த முறையிலே மதிப்பிடத் தேவைப்படும் அரசியல் தெளிவு அதிக அளவில் இங்கு இல்லை என்ற ஒரே தைரியத்திலா, இத்தனைப் பதட்டமாகப் பேசிக்கொண்டிருப்பது!

நான், தம்பி! நமது நாட்டு மக்களுக்கு அரசியல் தெளிவு வளரவில்லை என்ற எண்ணம் கொண்டவன் அல்ல். தெளிவு இருக்கிறது. அது வளர்ந்துகொண்டும் வருகிறது என்று நம்புகிறேன்.

அந்த நம்பிக்கையுடனேயே மக்களை அணுகி, கழகக் கருத்தைக் கூறி வருகிறேன்.

சாதனேகளைக் கணக்கில் எடுங்கள்—மற்ற இடங்களின் சாதனேகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்—அப்போதுதான் உண்மையான மதிப்பீடு தெரியும் என்று கூறிவருகிறேன்.

என் சொல் அவர்களின் செவி புகாமலில்லை.

அவர்கள் இதயத்திலே உண்மை பதியாமலில்லை.

பிறநாடுகளுடன் ஒப்பிடவும் மனம் இல்லையென்றால், தம்பி! இவர்களின் சாதனேகளை மதிப்பிட மற்றும் ஓர் வழி இருக்கிறது இதற்காவது இவர்கள் இணங்குகிறார்களா என்று பார்த்தால், காணும்.

இவர்கள் காட்டும் சாதனேகளை, இவர்கள் செய்தளிப்பதாகச் சொன்ன சாதனேகளுடன் ஒப்பிட்டுக் காட்டி, எந்த அளவு வெற்றி கிட்டிற்று என்பதையாவது கணக்கில் எடுக்கக் கூடாதா? அது ஒரு விதமான மதிப்பீடாக இருக்குமே! செய்வார்களா? செய்தார்களா? இல்லையே!

உணவுப் பிரச்சினை பற்றிய, ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்தின் போதும், என்னென்ன சாதிப்பதாகச் சொன்னார்கள்? இன்று அந்த முறையிலே இவர்கள் பெற்றுள்ள சாதனை எப்படிப்பட்டது? எலியைக் காட்டி, எமது வேலை முடிந்தது என்று சொல்லும் அளவுக்கு அல்லவா ஆகிவிட்டது.

இதுவரையில், ரூபாய்க் கணக்கிலே உணவுப் பொருள் விலைக்குக் (கடனுக்கு) கொடுத்துக் கொண்டு வந்த அமெரிக்கா, இனி டாலர்தான் தரவேண்டும் என்று சொல்லி நிர்ப்பந்தப்படுத்தும் நிலை வந்திருக்கிறதே. இது சாதனேக்குச் சான்றா?

கடன் கொடுக்கத் தயக்கமாக இருக்கிறது; ஏனெனில் கடனைத் திருப்பித் தந்திடும் சக்தி இந்தியாவுக்கு இருக்கிறதா என்பதிலே எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது என்று ஜப்பானிய பொருளாதார நிபுணர்கள் கூறிவிட்டிருக்கிறார்களே. இது சாதனேக்குச் சான்றா?

ரூபாயின் மதிப்பைக் குறைத்தாலொழிய நெருக்கடியைச் சமாளிக்க முடியாது என்று இவர்களே கூறிவிட்டார்களே? சாதனைக்குச் சான்று?

செல்வம்—வருவாய்—ஒருசிலரிடம் சிக்கிக் கொண்டது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனரே—இது சாதனைக்குச் சான்று?

இல்லை! இல்லை! இல்லை!—என்று ஏழையின் இதயம் கூறுகிறது. இதை மாற்ற, அவர்களை மயக்கத்தில் ஆழ்ந்த, வளைவுகள், வண்ணங்கள், உலாக்கள் உற்சவங்கள், பேரணிகள், முழக்கங்கள்! இவை போதாவென்று படங்கள்!

புனுகு பூசுகிறார்கள், புண் மறையும் என்று!!

அதிலே மிகவும் மணமுள்ளது என்ற நினைப்புடன் காமராஜர் புகழ் பாடுகிறார்கள். அதுபோதும், மக்களை மயக்க என்று!

இரண்டு நாட்களுக்கு முன்பு, ஜெர்மன் நாட்டவர் ஒருவர் வந்து பேசிக்கொண்டிருந்தார். இந்தப் பிரச்சினை எழுந்தது. நான் சொன்னேன்,

எங்கள் நாட்டில் இப்படி ஒருவரை புகழ் பாடி பூஜிக்கும் பழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஆனால், அதே மக்கள் தங்கள் இன்னல் போகவில்லை என்று தெரியும் போது 'பூஜா விக்ரஹங்கள்களை'த் தூக்கிப் போட்டுவிடுவார்கள். இதுவும் நெடுங்காலமாக இங்கு இருந்து வருவதுதான் என்று கூறினேன்.

தம்பி! நேருவைப் போலக் காமராஜரை வடிவம் கொள்ளச் செய்திடுவோம்; அந்த வடிவத்தைக் கண்டு, மக்கள் மயங்கிடும் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஓட்டுகளைப் பறித்துக் கொள்வோம் என்று கருதுகின்றனர்.

நெடுங்காலமாக யாராவது ஒரு வடநாட்டுக்காரரே பெருந் தலைவராக—உற்சவ மூர்த்தியாக—இருந்து வருகிறார் என்பதிலே தென்னாட்டவருக்கு இயல்பாகவே இருந்துவரும் மனக்குறையை காமராஜரை அகில இந்தியப் பெருந் தலைவர் ஆக்குவதன் மூலம் போக்கிக் கொள்ளலாம் என்ற ஆசைகூட உலவிக் கொண்டிருக்கிறது.

ஆனால் ஒரு தலைவரின் புகழ் பாடி, ஒரு கட்சியோ, அதனால் நடத்தப்படும் ஆட்சியோ, மக்களுக்கு என்றென்றும் மயக்கத்தை ஊட்டிட முடியாது.

சுகர்ணோவின் புகழ் பாடப்பட்டதை விடவா!

கனா நாட்டு அதிபர் நிக்ருமாவின் புகழ் பாடப்பட்டதை விடவா!

இவர்கள், அந்த நாட்டு மக்களால் மட்டும் அல்ல, வெளிநாட்டு மக்களாலும் பாராட்டப்பட்ட நிலையில் இருந்தனர். முன்பு! இப்போது? இவர்கள், அடிக்கடி நிலைமை மாறக்கூடிய ஜனநாயகச் சூழ்நிலையில்கூட அல்ல, 'ஒரே கட்சி' என்ற கவசம் அணிந்துகொண்ட நிலையில் இருந்துவந்தனர்! அவர்களே, மக்கள் தெளிவுபெற்று சீறி எழுந்தபோது, நிலைகுலைந்து போயினர்.

ஒரு நாட்டு ஆட்சியிலே என்றாலும் சரி, ஒரு கட்சியிலே என்றாலும் சரி, புகழ் மிக்க இடம் கிடைத்துவிட்டால் மட்டும் போதும், அது என்றென்றும் அவர்களை 'வல்லவர்களாக' வைத்திருக்கும் என்று கூறிவிடவும் முடியாது.

சந்தனம், பூசிக்கொள்ளப் பயன்படும், தாகவிடாய் தீர்க்க அல்ல.

கடுகு, தாளிக்கப் பயன்படும், அதனையே தின்று கொண்டிருக்க முடியாது.

பெருங்காயம், குழம்புக்கு மணமளிக்கும்; அதனையே கரைத்துக் குடித்துக்கொண்டிருக்க முடியாது.

ஆனால், காங்கிரசார் காமராஜரின் புகழ் பாடினால் போதும், மக்கள் தமது மனக்குறை எல்லாம் தீர்ந்து போய்விட்டதாகக் கருதிக்கொள்வார்கள் என்று நம்புகிறார்கள்.

அவருக்கே அந்த நம்பிக்கை வந்து விட்டதாகவும் சொல்லுகிறார்கள்!

புகழ் பொழியப் பொழிய, ஒருவிதமான மனமயக்கம், புகழ் பெறுபவர்களுக்கு ஏற்பட்டுவிடும். ஏற்பட்டு விடும்போது அவர்கள் தம்மைப் பற்றிப் போடும் கணக்கு, நாளாவட்டத்தில்—உடனே அல்ல—பொய்த்துப் போகும். அதிலும், பலனை எதிர்பார்த்து, செய்யப்படும் அர்ச்சனைக்கு மயங்கிவிடுவது மிகவும் ஆபத்தை மூட்டிவிடக்கூடும்.

அதனால்தான் ஆன்றோர் ஒருவர், கழுகு பிணத்தைத்தான் கொத்தித் தின்னும், 'முகஸ்துதி' செய்பவர்கள் உயிருடன் இருக்கும் போதே கொத்தித் தின்பார்கள் என்று கூறி, எச்சரித்தார்.

நெடுங்காலத்திற்கும் பிறகு, தமக்குக் கிடைத்துள்ள 'புகழ்'—'நிலை'—செல்வாக்கு காமராஜருக்கு, ஒரு மயக்கத்தைத் தந்திருக்கிறது என்பது, அவருடைய பேச்சிலேயே தெரிகிறது; எதிர்க்கட்சிகளை ஏசுவதிலும், மக்கள் படும் இன்னலைப்பற்றி அக்கறையற்றுப் பேசுவதிலும், புரிகிறது. இந்த நிலையை அவருடைய கட்சியே எத்தனை நாளைக்குத் தாங்கிக்கொள்ளப் போகிறது என்பது, அலட்சியப்படுத்த முடியாத ஒரு கேள்வியாகும். இவர்மீது பொழியப்படுவதைக் காட்டிலும் மிக அதிகமான அளவு புகழ் பொழியப்படும் நிலையில் இருந்த தலைவர்கள், திடீரென்று, தமது கட்சியினராலேயே, 'கைகழுவி' விடப்பட்ட கதைகள், நிரம்ப உள்ளன; கருத்துள்ளவர்கள் பாடம் பெற்றிடலாம்.

எல்லோராலும் விரும்பத்தக்க ஒரு திறமையான தலைவர். அவரைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்ற அமெரிக்கர்கள் அவர் ஒரு சிறந்த மனிதர் என்பதை ஒப்புக்கொள்வார்கள். இதை யாரும் மறுப்பதற்கில்லை.

இவ்விதம் புகழ்ந்தார், அமெரிக்க குடி அரசுத் தலைவர் அயிசனவர்; செப்டம்பர் 29; 1959-ல்.

அவருடைய குரல் உண்மையிலேயே சமாதானத்தின் குரலாகும்.

என்று நெஞ்சு நெக்குருககப் பேசினர் கனு நாட்டு அதிபர், 1961, ஜுலை 24-ம் நாள்.

> அவர் சாதாரண மனிதரல்ல! அவர் மிகவும் ஆற்றலும், அஞ்சா நெஞ்சமும், ராஜதந்திர அனுபவமும், உறுதியும் படைத்தவர்.

இவ்விதம் புகழ் பாடினர், பின்லந்து ஜனதிபதி 1963, டிசம்பர் நாலாம் நாள்.

> **அறிவுக் கூர்மையும், விஷய ஞானமும், திட சித்தமுள்ள மனிதராகக் கருதுகிறேன். மேலும் அவரது நாட்டைத் தலைமைதாங்கி நடத்திச் செல்லக்கூடிய ஆற்றல் படைத்த ஒரே மனிதர் அவர்தான்!**

என்று அமெரிக்க தொழிலதிபர் ஒருவர் புகழ்ந்து பேசினர்—1964 ஜனவரி 8.

> **மேதாவிலாசமும் நிதானமும், விடா முயற்சியும் மிக்கவர். அதோடு விழிப்புணர் புணர்வும் அசைக்க முடியாத உறுதியும் படைத்தவர்**

என்று புகழ்ந்தார் அமெரிக்க இதழ் அதிபர் ஒருவர்—1959 பிப்ரவரி 22-ல்.

> **அவர் மக்கள் மத்தியில் இருந்து வந்தவ ராதலால், ஜனரஞ்சகமான ஞானத்தை அறிவார்**

என்று ஜப்பானிய பத்திரிகையாளர் ஒருவர் புகழ்ந்து எழுதினர்—1963 டிசம்பர் 27-ல்.

> **அவரது விவேகத்தையும் பெருந்தன்மை யையும் புகழ்வதற்கு உண்மையில் எனக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை.**

தத்துவப் பேராசிரியர், பெர்ட்ராண்டு ரசல், 1962 அக்டோபர் 28-ல் இதுபோலப் புகழ்ந்துரைத்தார்.

இவ்வளவும், யாரைப்பற்றி தெரியுமா, தம்பி! இன்று எல்லாம் இழந்து எவருடைய பார்வையிலும் படாமல் இருந்து வரும் குருசேஷவ் பற்றி!

அதிபராக இருந்தபோது இத்தனைப் புகழ்மாலைகள்! இவ்வளவு புகழ் கிடைக்கும்போது, நமக்கென்ன குறை, என்றென்றும் நாம்தான் அதிபர், நாம்தான் தலைவர் என்றுதானே குருஷேவ் எண்ணிக்கொண்டிருந்திருப்பார்!

அத்தனைப் புகழும், அவரைக் காப்பாற்றிற்ரு? இல்லையே!

அத்தனைப் புகழ்மாரி பொழிந்தவர்களும், அவருக்கா இந்தக்கதி என்று ஒரு வார்த்தை கேட்டிட முன்வந்தனரா? இல்லையே!!

ஆகவே புகழ் பொழியப்பட்டால் போதும், நமக்கு அசைக்க முடியாத நிலை என்றென்றைக்கும் உண்டு என்று யாரும் இருந்துவிட முடியாது; கூடாது.

பெறுபவர் நிலை எப்படியாயினும், ஒரு தலைவர் பெற்றுவிடும் புகழ், மக்களுக்கு, செவிக்கு உணவு; அதுவும் சிறிது காலத்துக்கு!

மக்கள், வாழ்வு கேட்கிருர்கள்; உழைத்துவிட்டு!

கேட்பது ரொட்டி! கிடைப்பது கல்!—என்ருர்கள் கவிக்குயில் சரோஜினி அம்மையார்.

புசித்திட மக்கள் உணவு கேட்கிருர்கள்; புகழ் புசித்து அவர்கள் வாழ்ந்திட இயலாதே!!

அவர்கள் வாழ்வு கேட்கிருர்கள்; வண்ணப் படங்கள் அல்ல!!

படம் காட்டி, மக்களை, மயக்கிட முனைகிருர்கள்! நாமும் படம் எடுக்க முடியும் தம்பி! மக்கள் கண்டு உண்மையை உறுதியாக உணர்ந்திட மட்டுமல்ல, ஊராளும் காங்கிரசாரே, பார்த்துவிட்டு, உண்மை தானே! உண்மைதானே! என்று கூறிக் குமுறிடும் நிலை பெற்றிடக்கூட'

> ஐயோ! உன் மகனை—
>
> என் மகனை......
>
> 'அநியாயக்காரப் பாவிகள்'
>
> பாவிகள்!......
>
> சுட்டுக் கொன்றுவிட்டார்களடி அம்மா!
>
> அய்யய்யோ! என் மகனையா...
>
> எங்கே! எங்கே!...

தம்பி! மொழிக் கிளர்ச்சியின்போது மூண்டுவிட்ட விரும்பத்தகாத நிலைமையின்போது சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனைப் பெற்றெடுத்த தாய், சேதி கேட்டு, துடியாய்த் துடித்து, எங்கே! எங்கே! என்று அலறி ஓடிடும் காட்சி போதாதா!! அனுமதி கிடைக்குமா! ஒரு ஐம்பது அடி; இந்தக் காட்சி!!

> தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!
>
> இந்தி ஆதிக்கம் ஒழிக!
>
> இந்தியை எதிர்த்து செந்தீயில் சாகிறேன்!

இந்த முழக்கம்! ஒரு தீக் குளிப்புக் காட்சி! கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவும் இயலாமல் மக்கள் திகைத்து நிற்பது! எடுத்துக் காட்டவிடுவார்களா!

படம் எடுக்கிருர்களாம், படம்! சாதனைகளை விளக்கிட!

சாதனைகள்தான், ஏழையின் முகத்தில் கவலைக் கோடுகளாகப் பதிந்து கிடக்கின்றனவே!! படம் வேறு வேண்டுமா!!

அண்ணன்,

அண்ணாதுரை

12-10-66

தொடர் கதை:

மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

மிக ஆழ்ந்து குழிவிழுந்திருந்த ஒப்பிலழகரின் கண்கள் மூடின. நீண்டுயர்ந்த மூக்கின்மேல் பகுதியில் முதுமையின் திரைகள் பரவியிருந்தாலும், சிலையின் மூக்குப்போல எடுப்பாக விளங்கின. மண்டையோட்டின் அமைப்புகளை அப்படியே தெளிவாகக்காட்டுவன போலிருந்த மெலிந்ததலையின் தோற்றம் முதுமையின் கொடிய இரங்கத்தக்க நிலையை விளக்கியது. அவருடலில் தசைப்பற்றே இல்லை. நோயின் பசிக்கு அவை உணவாகி விட்டன! குருதிச் செழுமை குறைந்ததால், அவருடலில் நரம்புக் கொடிகளின் பின்னல், காய்ந்த இலைமீது இலை நரம்புகள் தெளிவாகத் தெரிவதுபோலத் தெரிந்தது.

மல்லிகையார், கணவரின் தோளைப் பற்றி, "என்னங்க, பையன் வந்திருக்கானே பாருங்க." என மெல்லக் கூறினர்.

ஒப்பிலழகர் கண்ணீர் வடித்தார். அவர் உதடுகள்கூம்பின. மகனைக்கண்டு ஆற்ருது அழலானர்.

தன்னைப் பற்றிய அன்பும் கவலையும்தான் ஒப்பிலழகர் நோய்க்கு ஆளாகக் காரணம் என உணர்ந்த புகழேந்தி நெஞ்சுருகினன். தன் நன்மையையே நாடும் தந்தையைப் பாசம் அவன் உள்ளத்தை ஈர்த்தடிமையாக்கியது.

'இவ்வளவு அன்பு பாராட்டும் தந்தையாருக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேனே' என்றெண்ணி உணர்ச்சிப் பெருக்கால் உடலும் சிலிர்த்தான்.

வெள்ளிவீதியின் கன்னமெல்லாம் உணர்வுப் புனல் வழிந்தது. அவளுடைய ஆழ்ந்த பெண்ணுள்ளத்தில் 'உடலின் புல்லிய நிலை' பதிந்தது. ஒரு நொடியில் இந்த மக்கள் உடல் வலிவையும் வனப்பையும் வண்ணத்தையும் இழந்துவிடக் கூடியது. இத்தகைய போலியமைப்பு வேறு எதுவுமில்லை என அவளுடைய இளம்மூளை தெளிவாக உணர்ந்தது. இந்த உணர்வின் அதிர்ச்சி அவளை மிகவும் துன்புறுத்தியது.

இரவு திணிந்து வந்தது.

சோர்வால் அவரவர்களும் ஆங்காங்குக் கண்ணுறங்கினர் தந்தைக்குச் சற்றுத் தொலைவில் புகழேந்தி படுத்திருந்தான்.

ஒப்பிலழகரின் உடல் நோயைப்பற்றி உலகம் ஒருகவலையும் கொள்ளவில்லை. அவர் நோயால் உலகில் ஓரியக்கமும் தடைப்படவில்லை; அவரைச் சேர்ந்த ஒரு சிலர்மட்டுமே வருந்தினர்களே தவிரப், பிறர் ஒரு கவலையுமின்றி இயங்கினர்.

இரவு தூக்கத்தில் திடுமென அலறிக் கூச்சலிட்டார் ஒப்பிலழகர். விழிகள் மருண்டு நோக்கின.

புகழேந்தி திடுக்கிட்டெழுந்தான். 'அப்பா! அப்பா!' எனப் பதறி விளித்தான்.

எல்லாரும் எழுந்து வந்தனர் பரபரப்பாக. முகிலன் 'என்ன? என்ன?' என வந்து ஒப்பிலழகர் அருகில் அமர்ந்து அவர் கையைப் பற்றினன்.

"புகழ்...பு...க...ழ்...புகழேந்தி?..." எனப் பிதற்றினர் ஒப்பிலழகர்.

"அப்பா! இதோ இருக்கிறேன். என்னப்பா?"

"புகழேந்தி...நான்...நான்...நம்பாதே..."

அவரால் பேச இயலவில்லை.

எல்லாருடைய நெஞ்சிலும் இடி விழுந்தது போலாயிற்று; உடலும் உள்ளமும் பதறினர்.

"அப்படிச் சொல்லாதீர்கள் அப்பா." எனக் கதறினன் புகழேந்தி. அவன் அன்பின் வடிவமாகக் கண்ணீர் நிறைந்து வழிந்தது.

"ஊம்..." என இகழ்ச்சியாக ஒலித்தார் ஒப்பிலழகர்.

"என் நாடி ஒடுங்கி வருகிறது...இன்னும் ஓரிரு நாள் தள்ளுவது அரிது.

அப்பா...புகழ்...நான் உன்னைத் தனியாக விட்டு விட்டு...எனக்கூறி முடிக்காமல் விம்மினர்.

அறப்பாவை அடக்கமாட்டாமல் அழுதாள். "அப்பா! அப்பா!...பேசாமலிருங்கள்" என முணு முணுத்தாள்.

"அம்மா!...அறம்! உன் தம்பிக்கு ஒரு பெண்ணைப் பார்த்து...மணம்..." எனக் கூறியவர் அப்படியே சோர்ந்து நிறுத்தினர்.

மன்னுதனர்," கவலைப்படாதீர்கள். நான் முன்னின்று புகழேந்தி மணத்தை நிறைவேற்றுவேன்." எனக் கூறினர் ஆறுதலுக்காக.

அதிகமான், ஒப்பிலழகர்முன் குனிந்து பார்த்து உருகினர்.

"புகழேந்தி நல்லபிள்ளை"ங்க. அவர் திருமணம் பற்றி வருந்தலாமா? நாங்கள் இருக்கிறோம். நீங்கள் மன அமைதியோடு இருங்கள். உங்கள் உடல்தேறி எழுந்து நடமாடினல் போதும். மற்றவற்றை நாங்கள் கவனிப்போம்.'' எனக் கூறினர் அதிகமான்.

மல்லிகையம்மையார் விம்மினர்.

"மகனைப் பற்றிய கவலையே அவர் மனத்தை அரிக்கிறது" என முணு முணுத்தார்.

சுடர்க்கொழுந்து புகழேந்தியைக் கைப்பற்றி அழைத்துச் சென்றார்.

வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட் ...	ரூ. 5	ரூ. 355
	ரூ. 10	ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு ...	ரூ. 5	ரூ. 337.50
	ரூ. 10	ரூ. 675.00

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறு சேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

"புகழேந்தி, எனக்கொரு கருத்து. நீ இந்தச் சூழ்நிலையை நன்குபுரிந்து கொண்டு செயல்பட வேண்டும். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் உன் வாழ்க்கை பற்றிய எண்ணமும் ஏக்கமுமே பெரிதாக இருக்கிறது. நானும் உன் அக்காவும் ஒரு கருத்து கொண்டிருக்கிறோம். நீ இசைவு தந்தால் அதுபற்றி மேலும் செயல்படலாம். 'வெள்ளிவீதி'யை உன்னம்மாவுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. குடும்பப் பாங்கான பெண்; பணிவிடை செய்வதிலும் பண்பிலும் அழகிலும் நல்லவள். அவளை நீ ஏன் மணந்து கொள்ளக்கூடாது?"

சுடர்க்கொழுந்தின் எதிர்பாராத இந்தவினா புகழேந்தியை ஓர் உலுக்கு உலுக்கியது. அதிர்ச்சியின் ஆற்றலை அவனால் புரிந்துகொள்ளவே இயலவில்லை!

புகழேந்தி கற்பனையிலும் எண்ணாதது இது.

வெள்ளிவீதி!

முகிலனின் தங்கை—

எனக்கு மணமகள்?—

புகழேந்திக்குப் புரிந்தது; புரியவில்லை. மறுக்க இயலவில்லை; உடன்பட மனமில்லை.

திகைத்தான்.

"நம் வீட்டுக்கு ஏற்றவள் வெள்ளிவீதி என நானும் நினைக்கிறேன். இங்கு வந்த ஒரு சில நாட்களில் அமைதியாக வெள்ளிவீதி பொறுப்போடு உழைத்ததை—உழைப்பதை-நேரில் பார்த்த பிறகு தான் எனக்கே இந்தக் கருத்து தோன்றியது. உன் நண்பனின் தங்கையைப் பற்றி உன்னிடம் நான் மிகுதியாக எதுவும் சொல்ல வேண்டியதில்லை."

அறப்பாவை அங்கே வந்தாள்.

சுடர்க் கொழுந்து "அறம், இங்கே வா. தம்பியிடம் நாம் பேசியதைப்பற்றிச் சொன்னேன். ஒன்றுமே பேசவில்லை." என்றார்.

அறப்பாவை கண்களை முன்றானையால் துடைத்துக் கொண்டாள்.

"புகழேந்தி, வெள்ளிவீதிக்கு உன் மீது அளவு கடந்த மதிப்பும் பற்றும் இருக்கிறது. இவ்வளவு அன்பான பெண் கிடைப்பது அரிது. உன்னை மணந்து கொள்வதற்கு அவளுக்குக் கொள்ளை ஆவல் இருக்கும் எனப் புரிந்து கொண்டேன். புகழேந்தி, அப்பாவிடம் இதைக் கூறினால் அவருடம்புக்கு ஒரு நோயும் அண்டாது. நாளையே நலமாக எழுந்தமர்வார்..."

(வளரும்)

வெள்ளையுள்ளம்

செல்வி. எஸ். இராஜம் புஷ்பவனம் (இலங்கை)

"யவன மரக்கலம் வந்து சேர இன்னும் நான்கு நாழிகை யாவது கழியவேண்டும்"

"அராபிய மரக்கலத்துப் பண்டங்கள் யாவும் இறக்குமதி யாயிற்றா?"

"ஆம்! குதிரைகளுக்குப்பதிலாக யானைத் தந்தம் ஆயிரமும், மயிற்றோகை ஆயிரமும் ஏற்றுமதி யாயிற்று"

"சீன மரக்கலத்திலிருந்து, கவனமாக வெடிமருந்துகளையும், பெண்களின் கைவளைகளையும் பாலர்களின் வர்ணப் பொம்மையும் கண்ணாடிச் சாமான்களை களையும் இறக்குமதி செய்யத் துரிதமாகுங்கள்." சுங்கச் சாவடியின் அதிகாரிகளின் குரல்கள் ஒலித்துக் கொண்டேயிருந்தன. கடிகாரக் கோபுர உச்சியில் கட்டியிருந்த மணியை-மணற்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு அடித்து நிறுத்தினான் கடிகைத் தூதுவன்.

உலகப் பிரசித்தத்தை ஈழத்துக்கு ஏற்படுத்திய தமிழர் நகராம் மாந்தையின் திருக்கேதீஸ்வரக் கோவிலின் பின்னே துறைமுகத்திலிருந்து சமுத்திர இரைச்சலையும்விட சனசமுத்திர இரைச்சல் பெருகி வழிந்தது. குதிரைகளும், பட்டும், பொன்னும் முத்தும் சந்தையிலே விலைபோய்க் கொண்டிருந்தன.

இராசவீதியினைக் கடந்து, இசைக்கலைஞர் வீதிவழியே வந்து' கொல்லர் பாக்கத்தைக் கடந்து சந்தைக்கு வந்தான் அவ்வழகிய இளைஞன். வலைஞர் முற்றத்தில் குவிந்து கிடந்த முத்துச் சிப்பிகளின் அழகிய ஊனின் துர்நெடியைச் சகிக்க முடியாது தலையைத் திருப்பியவாறே, அலைக்கரங்கள் கொஞ்சும் கடற்கரையில் நடந்தான். அழகிய வள்ளம் ஒன்றில் சாய்ந்து நின்றவாறு அவன் வருகைக்குக் காத்திருந்தாள் வண்ணமயிலாள் அல்லி.

யவன மங்கையரும் கண்டு வியக்கும் வண்ணம் அழகுப் பதுமையாக நின்றாள். அவள் கால்பாதங்களில் பூசிய செம்பஞ்சுக் குழம்பினை கன்னத்தில் செவிலித் தாய் அப்பினளோ? என்ற ஐயம் ஏற்படும் வண்ணம் அவள் கன்னம் சிவந்திருந்தது. அவ்விளைஞன் அவளருகே செல்லச் செல்ல அந்தச் செம்மை கடுஞ் செம்மையாகி வர்ணசாலவித்தை புரிந்தது. அவளின் செவ்வரி படர்ந்த நயனங்கள் புன்சிரிப்பினைச் சொல்லா நிற்க—அத்தொழிலைப் பழமையாகச் செய்யும் கோவைக் கனியிதழ் குறுகுறுப்பைக் கொட்டியது. அவ்விளைஞன்.

"அல்லி" என முறுவலித்தான். திடங்கொண்ட தோளும், திடம் கொண்ட மனமும வாயப்பெற்ற அவன் பார்வையில் உறுதி தொனித்தது.

"உம்"

"என்ன அல்லி என் மீது கோபமா?"

"ம்—உம்"

"என் நண்பன் கிளாடிஸ் இன்று யவனக் கப்பலில் வருகிறான். அவனைச் சந்திக்க அவசரமாக வந்தேன்-உன்னையும் கண்டேன்"

"என்னைப் பார்க்கவா வரப் போகிறீர்கள்?

"கண்ணே. உன்னை எந்நேரமுமே பார்க்கின்றேன். என் நெஞ்சின் ஓவியம் நீ யாயிற்றே"

"இன்றென்ன அவசரமோ?"

"ஆம்! மிக அவசரம் அல்லி"

"சொல்லுங்கள் அத்தான்"

"கள்ளிக் கோட்டையிலிருந்து நமது மாந்தை துறைமுகத்துக்கு வரும் மரக்கலங்கள் சூறையாடப் படுகின்றனவாம். நாமும் நமது படைகளைப் பல நாடுகட்கு அனுப்பிவிட்டோம் — எனவே படைபலமும் தற்போது கைவசமில்லை"

"மரக்கலங்களைக் காப்பது?"

"அதற்கு ஒரே வழிதானுண்டு!"

"என்ன வழி?" என்றாள் அல்லி துடிப்புடன்.

"தளபதி கிளாடிஸ் உதவ வேண்டும்."

"மாந்தைத் தளபதியார் முடிவு இதுதானா"

"என்ன செய்வது அல்லி மாந்தைத் தளபதியாக நானிருந்தாலும், படைபலம் இல்லையே தளபதி கிளாடிஸ் மிக நல்லவர். என் நண்பன். அதோடு நூற்றுக்கு மேற்பட்ட யவன வீரர்களுடன் வருகிறார். அவர் உதவியால் நம் துறைமுகத்துக்கு வரும் கலங்களைப் பாதுகாக்கலாமல்லவா?

"மன்னர் என்ன சொல்கின்றார்'

"உடனலம் பாதிக்கப்பட்ட அவர் ஓய்வு எடுக்கிறார்"

"அதோ, தங்கள் தானைத் தலைவர் மெய்யன்பன் வருகிறார்"

"மன்னர் தங்களைத் தென்னிலங்கைக்குச் செல்ல உடனே வருமாறு அழைக்கின்றார்"

"உடனேயா?"

"ஆம் தளபதியாரே"

"சரி. நீ போ வருகிறேன்... அல்லி கடமை அழைக்கிறது"

"உம்... தங்கள் பெயரைக் கூறினால் கிளாடிஸ் உதவுவார் இல்லையா?

"நிச்சயமாக...இதோ இக்கணையாழி...அவர் தந்ததுதான் அதைக் காட்டினால் அவர் நிச்சயம் உதவுவார்—அப்படியாயின் வருகிறேன் அல்லி வெற்றியுடன்"—

"காத்திருப்பாள் உங்கள் அல்லி'

"யவன மரக்கலம் துறைமுகத்தை அண்மியது வீரர்கள் சோதிக்கப்பட்டனர். யவனத் தளபதி கிளாடிஸ் நடந்து துறைமுகத்தைக் கடந்து வந்தார் வெண்தந்தத்தினாள் செய்யப்பட்ட கிரேக்க தெய்வம் போல் அழகுருவான கிளாடிஸ் யவன பாக்கத்திற்குச் சென்று தனக்கு ஒதுக்கப்பட்ட அழகுறு விடுதிக்குச் சென்றார். சற்று நேரத்தில் அவர் நீலவிழிகள் வியப்பால் விரிவடைந்தன. சற்றுப் பொறுத்து அழகுத் தமிழில்

"என் நண்பனா கூறினார்" என்றார்

"ஆமாம்" என்றாள் அல்லி. சந்தன நிறமும், திங்கள் வதனமும் கருங்கூந்தலும் கருவிழிகளும் கிளாடிஸ் மனதை வெகுவாகக் கவர்ந்தன. அவளின் செம்பஞ்சு தீட்டப்பட்ட பாதங்களின் சிலம்

பொலி வெள்ளை இளைஞனின் நெஞ்சத்தில் இசை கூட்டியது. தமிழ்மகளிரின் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பை அவன் நன்கு அறிவான். கற்பிலுயர்ந்து கணவனை வழிபடும் அக்குலக் கொடியினத்தின் இந்த அழகு மயில் தன் துணைவியானால்...காலமெல்லாம் இன்பக் கானம் இசைத்து மகிழலாம்—ஆ! அது கிடைக்கும் பேறு—நாட்டிற்கு நாடு வேறுபட்டாலென்ன? நிறமும், இனமும், மொழியும் வேறுபட்டாலென்ன உணர்வும், விழிமொழியும், உள்ளமும் ஒன்று தானே? கொடுக்கும் வார்த்தையைக் காப்பாற்றும் இனம் தமிழினம் இதைக் கொண்டு அவளைத் தன் துணைவியாக்கினால்—ஒருவேளை இந்நங்கை நல்லாள் நண்பனின் தங்கையாயின் நினைத்ததே நடக்குமே!

"தளபதியாரே, எங்கள் நாட்டிற்கு வந்த துயர் இது" அல்லியின் மொழியில் சிந்தனை கலந்த கிளாடிஸ் சிரித்தான்.

"ம்...அதற்குப் பரிசாக என்ன கிடைக்கும்?

"பரிசாகவா?"

"ஆம் கடற்கொள்ளையரோடு நூறு வீரர்களோடு மட்டும் பொருது வெற்றிபெற வேண்டாமா? அப்படி உயிரோடு, வெற்றியோடு திரும்பினால் பரிசு வேண்டாமா?

"பரிசா வேண்டிய பரிசு கிடைக்கும்"

"உங்கள் மன்னர் தரும் பரிசு வேண்டாம்"

"பின்...தளபதி உதயவர்மன் அவர்கள்..." அல்லி தயங்கினாள்.

"உனக்காக மட்டும் தானே போகிறேன், எனவே நீதான் பரிசு தரவேண்டும்"

"ஓ! கட்டாயம் தருவேன்—போய் வாருங்கள் தளபதியாரே"

"மறுக்கமாட்டாயே"

"இல்லை"

"நிச்சயமாக"

"நிச்சயமாக"

"ம்! நீ...உன்னையே எனக்குத் தரவேண்டும்"

"ஆ! அல்லி அதிர்வுற்றாள். திருக்கேதீஸ்வர ராசகோபுரம் அரண்மனைகள் பலதும் ஒரே நேரம் இடிந்து அவள் தலையில் விழுந்தது போன்றிருந்தது."

"சரி. நீ சம்மதியாவிடில் நான் போகவில்லை கடற்கொள்ளைகூடும் பின் மாந்தையின் செல்வநிலை அழியும் —பட்டினப்பாக்கத்து செல்வநிலை குன்றியதும் அப்படியே நாடும்"

"ஐயையோ! அதைச் சொல்லாதீர்கள்" அவள் கண்கள் குளமாகின. ஒரே ஒருகனம்" சரி வெற்றியோடு வாருங்கள் நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவேன்" தளபதி கிளாடிஸ் அவள் உறுதியினைக்கண்டு வியந்தவாறே தன் படையுடன் கிளம்பினான்.

மூன்று பூரணைகள் கடந்தபின்-பாலாலியின் மறுகரையிலே துவண்ட மலர் மாலை போல அமர்ந்திருந்தாள் அல்லி—அவள் நடையில் துள்ளலில்லை.

"அல்லி" தளபதி உதயவர்மன் குரல் கேட்டுத் திரும்பினாள். அதில் கவர்ச்சியில்லை;

"வாருங்கள் தளபதியாரே. என்னை இனிமேலும் அல்லி என உரித்தாக அழையாதீர்கள். நான் வேறு ஒருவருக்கு மனையாளாகப் போகிறேன்" என்று கூறிவிட்டு விர்ரெனப் போய்விட்டாள். திக்பிரமை பிடித்து அவன் நின்றான். அவனது கால்கள் தாமாகவே நடந்தன. கடற்கரையிலே வுள்ளம் ஒன்றில் முகம்புதைத்து ஏங்கியழுத அவன் முதுகை யாரோ தட்ட திரும்பினான். கடற்கொள்ளைக்காரர்களை அழித்து வெற்றிபெற்ற வீரப்புன்னகை உதட்டில் நெளிய இனிய குரலில்

"நண்பா" என்றான். இருவரும் ஆரத் தழுவினர்

"உனது துயரின் காரணம் என்ன?" நண்பனின் நாடியைத் தாங்கி கேட்டான் கிளாடிஸ்—அழுகை விம்ம அதனூடே நடந்ததைக் கூறினான் தமிழ்வீரன் ஆண்மைமிகு வீர நெஞ்சிலும் காதலென்னும் ஈரக்கசிவினைக் கண்டு வியந்த கிளாடிஸ் அவசரமாக கேட்டான் "அப்படியாயின் அல்லி உன் காதலியா"

"ஆம்! என்னுயிரைப் பறித்தவள்தான் நண்பா" என ஏங்கினான் உதயவர்மன்.

"ஓ! இந்தக் காதலரிடையா பூசல்...சரி. வா...அல்லி இல்லம் செல்வோம்" பலவந்தமாக நண்பனை இழுத்துச் சென்றான் கிளாடிஸ்.

குடிமக்கள் பகுதியில் அவளின் அழகிய இல்லம் அமைந்திருந்தது.

"அல்லி" கிளாடிஸ் குரல் கேட்டு மெதுவாக வெளியே வந்தாள் தமிழ்க்கன்னி அல்லி.

"இதோ...இது யார் தெரியுமா?" அல்லி தலைநிமிர்ந்து பார்த்துவிட்டு தலை கவிழ்ந்தாள்.

"இவர் உன் காதலர் அல்லவா?" அல்லி தலையைத் திருப்பிக் கொண்டாள் அவள் கயல் விழிகள் நீரோடையாகின.

"நண்பா, அல்லி தன் நாட்டிற்காகக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் தன் காதலையே தியாகம் செய்ய வந்தாள். இந்த மாந்தைநாடு என்றும் இக்குல மகளிர் கற்பால் சொற் சிறப்பால் உயர்ந்து விளங்கும்"

"நண்பர்! என்ன சொல்கிறார்" உயவர்மன் திணறினான்.

"சொல்வது...என்ன...அல்லி நீ இனி கிளாடிஸ்ஸின் தங்கை. ஆம் உண்மை. இப்படி வா தங்காய்" உதயவர்மனின் கரத்தையும், மலர்க்கொத்தினையொத்த அல்லியின் கரத்தையும் இணைத்து வைத்தான் யவனத் தளபதி கிளாடிஸ்-"நண்பா! என் தங்கை அல்லிக்கு நானளிக்கும் சீதனம் கடற்கொள்ளையினை மடக்கிய வெற்றிதான்'. எனக் கலகலவென சிரித்தான்' வெள்ளை மனமுடைய அவ்வெண் வீரன். அவனது வெள்ளையுள்ளத்துச் சிரிப்பினை திரைகடல் பொங்கி நுரை மூலம் களித்தது.

பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடி சைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் :—
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
60. திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.